O.S.12/2019
PW1 – பாண்டியம்மாள்
நாள் 11.07.2025, 01.00 P.M.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** இந்த வழக்கின் 4ம் பிரதிவாதி வள்ளி என்பவர் இறந்துவிட்டார் என்றாலும் வள்ளிக்கு வாரிசு உள்ளார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வள்ளியின் வாரிசுகளை இந்ந வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. என்னுடன் பிறந்த பெரியசாமி (எ) ராஜேந்திரன் என்ற ஒருவர் இருந்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். பெரியசாமி (எ) ராஜேந்திரன் வாரிசுகள் உள்ளார்கள் என்றால் அவர் திருமணம் முடிக்கவில்லை. பெரியசாமி (எ) ராஜேந்திரன் திருமணம் முடிந்து வாரிசுகள் உள்ளார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக கூறிகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கானது முதலில் இராமநாதபுரம் நீதிமன்றத்தில் 1999ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கானது பரமக்குடி சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதலாகி முதுகுளத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாறுதலாகி வந்து ஓ.எஸ்.28/2004 என்ற எண் வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

2. ஓ.எஸ்.28/2004 என்ற வழக்கானது இந்த வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 03.09.2010ம் தேதி தீர்ப்பாகி உள்ளது என்றால் சரியல்ல. ஓ.எஸ்.28/2004 என்ற வழக்கின் தீர்ப்பை எதிரித்து பரமக்குடி சார்பு நீதிமன்றத்தில் A.S.9/2011 என்ற மேல்முறையீடு தாக்கல் செய்து நடைபெற்று வந்தபோது முதுகுளத்தூர் சார்பு நீதிமன்றம் A.S.86/2017 என்ற எண்ணில் நடைபெற்று மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய தந்தை பெயர் கண்ணப்பஆசாரி, என்னுடைய தாயார் பெயர் லட்சுமி. நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. வழக்கு சொத்தின் சர்வே எண் 115/22ல் 7 செண்ட் சொத்தை எனது தந்தை எனது சகோதரரை மைனராக கட்டுப்படுத்தி 08.03.1946ம் தேதி 4 சாதிக்காரர்களுக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. 1946 ம் ஆண்டு நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். அன்றைய தேதியில் எனது சகோதரர் மைனர் என்பதால் அவரை மட்டும் கட்டுப்படுத்தி தாவா

சொத்தானது கோவிலுக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த சொத்தை போக மேற்படி சதுர எண்ணில் எனது தகப்பனாருக்கு எந்த வித சொத்தும் இல்லை என்றால் சரியல்ல.

4. பழைய வழக்கில் எனது குடும்பத்தார்கள் எதிர் தரப்பினருக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணமானது ஒருதலைபட்ச தீர்ப்பு மற்றும் அதன் தீர்ப்பாணை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களை ஓ.எஸ்.3/1997 ல் வழக்கின் பிரதிவாதிகள் அவரது தரப்பு வா.சாஆ.10, வா.சா.ஆ.11 ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் கண்ட தீர்ப்பு ஒரு தலைபட்ச தீர்ப்பு என்று பரிசீலித்துதான் ஓ.எஸ்.28/2004 வழக்கு முழுமையாக தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என தீர்ப்பாகி உள்ளது என்றால் சரியல்ல.

5. ஓ.எஸ்.28/2004 வழக்கின் மேல்முறையீட்டு தீர்ப்புக்கு பிறகு அவ்வழக்கின் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் சமூகத்தினர் சமரசமாகி அவத்தாண்டை கிராமத்தை சேர்ந்த விக்னேஷ்வர் ஆலையத்திக்கு பாத்தியமான 7 செண்டை பொதுவாக வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அவத்தாண்டை கிராமத்தை விட்டு சென்று 40 வருடம் ஆகிவிட்டது என்றால் சுமார் 20 வருடம் ஆகிவிட்டது. நான் அவத்தாண்டை கிராமத்தில் குடியிருந்தேன் என்பதை காட்டுவதற்கு ஆதார் அட்டை, குடும்ப அட்டை , வாக்காளர் அட்டை போன்ற எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தானது எனக்கு பாத்தியமானது என்பதை காட்டுவதற்கு எந்த வித வருவாய் ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. 1999 ல் நடைபெற்ற வழக்கில் உடனடியாக பரிகாரம் கோராமல் காலம் கழித்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரமானது கால வரம்பு சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தை கால வரம்பிற்குள் வழக்கில் தாக்கல்செய்துள்ளேன் என்பதை காட்டுவதற்கு நகல் எடுத்து வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 5 சாதிக்காரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை எனக்கு பாத்தியம் என்பதை காட்டுவதற்கு

வா.சா.ஆ.3 ஆவணமான பட்டா மாறுதல் ஆவணத்தை வட்டாட்சியர் கடலாடி அவர்களிடம் சமர்பித்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. தாவா சொத்து எனக்கு பாத்தியம் இல்லை என்பதால்தான் மேற்படி சொத்தின் பட்டா எனது பெயருக்கு வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணமானது பட்டா கோரியுள்ள நீதிப்பேராணை வேண்டி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நான் தாக்கல்செய்த மனுவின் நகல் என்றால் சரிதான். மேற்படி மனு என்னுடைய பெயருக்கு மாற்ற முடியாது என்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல வழக்கு சொத்தில் எனக்கு பாத்தியமில்லாத நிலையில் தாவா சம்பந்தப்பட்ட ஆவணங்களை செல்லாது என்று அறிவிக்க கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கட்டியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பூர்வீக சொத்து என்ற அடிப்படையில்தான் பரிகாரம் கோரிகிறேன் என்றால் சரிதான்.

8. எனக்கு நான்கு பிள்ளைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். அவர்கள் பெயர் பாண்டி, பழனி, ராமலட்சுமி, பஞ்சவர்ணம். என்னுடைய பிள்ளைகளை இந்த வழக்கில் வாதியாக சேர்க்காத காரணத்தினால் அவசிய தரப்பினரை வழக்கில் சேர்க்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்படகூடியது என்றால் சரியல்ல. சொத்தின் மதிப்பு கூடி உள்ளதால் இந்த வழக்கை பிரதிவாதிகளிடம் பணத்தை பெறவேண்டி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி